**OS.NO. 26/2020 PW-1**

நாள் : 14.06.2024

பெயர் : குப்பன் (எ) குப்புசாமி

த/பெ : பெருமாள்

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

சர்வே எண் 551/2 க்கான பட்டாவை **வ.சா.ஆ.1** ஆக நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். அந்த பட்டா கூட்டு பட்டாவாகும். அந்த கூட்டு பட்டா எண் 328 ஆகும். பிரதிவாதியின் தாயார் பெயர் வள்ளியம்மாள் என்றால் ஆமாம். இந்த வள்ளியம்மாள் கூட்டு பட்டா எண் 328 ல் 9 ஆவது நபராக காட்டியிருக்கிறார் என்றால் ஆமாம். அந்த கூட்டு பட்டாவில் (வ.சா.ஆ.1) பொது வழி எதுவும் காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். அந்த கூட்டு பட்டாவில் (வ.சா.ஆ.1) பொது வழி இல்லாத காரணத்தால் நீங்கள் சொல்வது போல் பொது வழி இல்லை என்றால் அது தவறு. நீங்கள் தாக்கல் செய்துள்ள தவாவில் பொது வழியின் நீள அகலம் என்ன அது யார் வீடு வழியாக செல்கிறது என்ற விவரத்தை சொல்லியிருக்கறீர்களா என்றால் அதை என் வழக்கறிஞரிடம் தான் கேட்கவேண்டும். 2ம் வாதி பாலாஜி என்பவர் என்னுடைய மகன் ஆவார். 2ம் வாதிக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம்.

2ம் வாதி பாலாஜி சர்வே எண் 551/2 ல் ஒரு பகுதியை அம்பிகா என்பவரிடம் இருந்து கிரயம் பெற்றுள்ளார் என்றால் ஆமாம். 29.07.2020 அன்று தான் பாலாஜி அம்பிகாவிடம் கிரயம் பெற்றுள்ளார் என்றால் தாவாவிற்கு பிறகு தான் பெற்றுள்ளார். அந்த பத்திரத்தில் 4 எல்லைகள் நீங்கள் சொல்வது போல் வழி இருப்பது போல் காட்டவில்லை என்றால் அது தவறு. பிரதிவாதி சொத்தின் வழியில் அத்துமீறி தடையை ஏற்படுத்திவிட்டார் என்று கூறிகிறீர்கள் அவர் என்ன மாதிரியான தடையை ஏற்படுத்தியுள்ளார் என்றால் தட்டி கட்டி தடை ஏற்படுத்தியுள்ளார்.

உங்கள் வாதுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி பாதையை மறித்து தட்டி போட்டிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறீர்களா என்றால் ஆமாம். நீங்கள் சொல்வது போல் பிரதிவாதி வழியை மறைத்து தட்டி ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. பொது வழி நீங்கள் சொல்வது போல் இருப்பது என்பதற்கு அரசாங்கத்தில் இருந்து எந்த ஆவணத்தையும் வழக்கில் தாக்கல் செய்வில்லை என்றால் அது நத்தம் இடமாகும் அதை காலம்காலமாக பயன்படுத்தி வருகிறோம். நீங்கள் பொது வழி என்று தாவாவில் விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை வெறும் நிரந்தர உறுத்துகட்டளை தான் கேட்டுள்ளீர்கள் என்றால் அது சரியல்ல. பொது வழி விளம்புகை பரிகாரம் கோராமல் நீங்கள் வழக்கில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல.

வள்ளிம்மாளின் வாரிசுகள் மொத்தம் 5 பேர் மகாதேவன், ஆறுமுகம், சுப்பிரமணி, பழனி மற்றும் காமாட்சி ஆகும். இன்றைய தேதியிலும் வள்ளியம்மாளும் வாரிசுதாரரும் கூட்டாக தான் சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வள்ளியம்மாள் வாரிசுதாரர்களை வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் ஆமாம். அதனாலேயே இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. பொய்யான சங்கதிகள் சொல்லி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே நீங்கள் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

Sd/- **********
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.